நீராறு சுரங்கப் பாதை.

திரு. கே. ராஜாராம் (திரு வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1971 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நீராறு சுரங்கப் பாதையின் நுழைவாயில் பெரும் நிலச்சரிவுகள் ஏற்பட்டனவா ?

(இ) ஆமெனில், சுரங்க வாயிலை சீர்ப்படுத்துவதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

(உ) இப்பணியை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ரூ. 5 லட்சம்.

(உ) நிலச்சரிவு காரணமாக குடவரையின் நுழைவாயிலிலிருந்து சுரங்கப்பாதை அமைக்கும் பணியேதும் செய்ய இயலவில்லை. இதன் விளைவாக 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் அளவில் முடிக்கத் திட்டமிட்ட பணி 1973-ஆம் ஆண்டு டிசம்பர் அளவில் தான் முடிக்கப்படலாம்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

World Bank.

* 63. *Q.*—THIRU S. JAYARAMA REDDIAR (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the World Bank Team which visited Tamil Nadu during September gave any suggestions and advice and laid any conditions for the administration and distribution of the loans given by them and the modus operandi of the plan;

(*b*) the details thereof;

(*c*) whether any modification has been made in the modus operandi here so as to implement their suggestions; and

(*d*) if so, the details thereof ?

1972 ஆகஸ்ட் 18]

உலக வங்கி

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உலக வங்கியைச் சேர்ந்த பிரமுகர்கள் கடந்த செப்டம்பர் மாதம் சென்னைக்கு வந்திருந்தபோது அவர்கள் தரும் கடன் தொகையை வினியோகித்தல், நிர்வகித்தல் போன்ற யோசனைகளையும் நிபந்தனைகளையும் திட்டத்தைச் செயல் படுத்தும் முறைகளையும் தமிழக அரசினருக்குத் தெரிவித்தார்களா ?

(இ) அதன் விவரங்கள் என்ன?

(உ) அவர்கள் கூறிய யோசனைகளைச் செயல்படுத்தும் வகையில் இங்கு அமுலாகி வந்த நடைமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா ?

(எ) ஆம் எனில், அந்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கேள்வி கேட்ட உறுப்பினரைக் காணவில்லை. (அ), (இ), (உ) & (எ) விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

* 64. *Q.*—Thiru S. JAYARAMA REDDIAR (on behalf of Thiru R. KRISHNASWAMY NAIDU): Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether it is a fact that the World Bank has come forward to sanction loans for agricultural development as a result of negotiations held at Washington between the World Bank and the delegates under the leadership of the President of Tamil Nadu Land Development Bank; and

(*b*) if so, the details thereof?

உலக வங்கி

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்): மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் தலைவர் தலைமையில் அமெரிக்கா சென்ற தூதுக்குழு வாஷிங்டனில் உலக வங்கி

@ 180–181-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.